[1993 மார்ச் 16

இந்த அளவை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நாம் அளவை உயர்த்தச் சொல்லிக் கேட்டோம், ஆனால் அண்மையில் விலையைத்தான் மத்திய அரசினர் உயர்த்தி இருக்கிறார்கள். ஆனாலும் அன்றைக்கு அமைச்சராக இருந்த மாண்புமிகு தருண்கோஹா அவர்கள் நம்முடைய வேண்டுகோளைப் பரிசீலிப்பதாகக் கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறார்கள். அது அந்த அளவில் நிற்கிறது. இன்னும் நமக்கு அது உயர்த்தி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

94-

தேயிலைத் தோட்ட நிறுவனத்தில் தொழிலாளர்களின் படித்த குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு.

*11506-**டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் படித்த குழந்தைகளுக்கு தேயிலைத் தோட்ட நிறுவனங்களிலேயே அவர்களின் படிப்புத் தகுதிக்கு ஏற்ப வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு தோட்ட நிறுவனங்களில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பு வழங்க தோட்ட நிறுவனச் சட்டம் 1951 மற்றும் அதன் விதிகளில் வழிவகை ஏதுமில்லை. அவ்வாறு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Tamil Nadu State Labour Advisory Board; State Apprenticeship Council;

1993 மார்ச் 16]

Tamil Nadu Planters Association ஆகிய நிறுவனங்களை ஒன்றாக அழைத்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், அவர்களோடு பேசி அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப எலக்ட்ரிசியன், டர்னர், ஃபிட்டர் மற்றும் ஸ்டெனோகிராஃபர் போன்ற பயிற்சியில் தேறியவர்களுக்கு அந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஆவன செய்தால் நம்முடைய அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பது மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கும் நல்ல பெயர் கிடைக்கும் என்பதாலும், அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய பிள்ளைகளுக்கும் மறுவாழ்வு ஏற்படும் என்பதாலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய முழு முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்ட நிறுவனங்களில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது மிகவும் குறைவு. தோட்டப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் கல்வித் தகுதி ஏதும் இல்லாத உடல் உழைப்புப் பணியாளர்கள். அப்படிப்பட்ட உடல் உழைப்புப் பணியாகும் தோட்டத் தொழில். அங்கே அலுவலகப் பணிகள், கண்காணிப்புப் பணிகள் போன்ற ஒருசில பணிகளைத்தான் கல்வித் தகுதியின் அடிப்படையில் படித்தவர்களுக்குக் கொடுக்க முடியும். எனவே தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான பரிசீலனை ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.50

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத்தினுடைய, டீ எஸ்ட்டேட் பேக்டரீஸ் என்று சொல்லக்கூடிய அந்தத் தொழிற்சாலைகளில் எலெக்ட்ரீசியன், டர்னர், பிட்டர் போன்ற வேலைவாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இப்போதுகூட வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் சுமார் 37 தேயிலைத் தொழிற்சாலைகளில் கேரள மாநிலத்தினுடைய மாணவர்களையும், கேரள மாநிலத்தினுடைய நபர்களையும் வேலைவாய்ப்பில் அமர்த்தி உள்ளன, அங்கே இருக்கின்ற அந்த நிறுவனங்கள். அப்படி இருந்தபோதிலும், வால்பாறையைச் சுற்றியுள்ள

[1993 மார்ச் 16

பகுதிகளில் தகுதிவாய்ந்த தொழிலாளர்களுடைய பிள்ளைகள் படித்துவிட்டு கூலிவேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் போஸ்ட் கிராஜுவேட் அளவிற்கு படித்துவிட்டு இருக்கும் என்ஜினியர்கள் கூட இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய தகுதிக்கு ஏற்ப மீண்டும் அங்கே வேலைவாய்ப்பு கொடுப்பதற்காக அரசு ஆவன செய்யுமா? அது மட்டுமல்ல, அரசாங்கம் அந்தத் தேயிலைத் தோட்ட நிறுவனத்திற்கு அளிக்கப்படும் சலுகைகளை அவை பெறுகின்ற பட்சத்தில், அந்த நிறுவனங்களுக்கு ஒரு நிபந்தனை விதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி தேயிலைத் தோட்ட நிறுவனம் பற்றியதாகும். தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகளிலே படித்தவர்களுக்குத்தான் அங்கங்கே வேலை வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்தத் தொழிற்சாலையையும் இன்னாருக்குத்தான் வேலை வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்று அரசு கட்டாயப்படுத்த இயலாது. எனவே அங்கே தகுதி அடிப்படையிலே இப்போதும் வேலை கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டங்களுக்கு சூப்பர்வைசர்கள் மற்றும் மேனேஜர், அசிஸ்டென்ட் மேனேஜர் என்று பல்வேறு வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கவேண்டும். வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையையாவது அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்ட நிறுவனங்களை, தனியார் நிறுவனங்களை நாம் கட்டாயப்படுத்த இயலாது. எனவே தனியார் நிறுவனங்களை நீங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாகத் தான் தேயிலைத் தோட்ட நிறுவனங்களுக்கு பணியாளர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்பதற்கு அல்லது கட்டாயப்படுத்துவதற்கு உரிமை கிடையாது.

1993 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

95-

பாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குதல்.

* 11717–**திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பாக்கம் கிராமத்தில், ஒரு கால்நடை மருந்தகம் திறக்க, 23-10-1992 அன்று அரசு உத்தரவு பிறப்பித்தது. அதன்படி 28-10-1992 அன்று அந்த மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதில் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை ஆய்வாளர், ஒரு கால்நடை உதவியாளர் ஆகியோர் பணியில் அமர்த்தப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையை ஏற்று கால்நடை மருந்தகம் திறப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். அதே நேரத்தில் மருந்தகத்திற்கு கட்டடம் இல்லாத காரணத்தினால் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்றவாறு அது பரிசீலிக்கப்படும்.